பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 12 2025** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சேவைத் துறையின் உலக மையமாக இந்தியாவை மாற்ற மாநிலங்கள் முன்வர வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. சென்னை, கோவை நகரங்களில் ரயில் பெட்டி முனையங்கள் விரிவுபடுத்தப்பட உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. மத்திய அரசு தமிழகத்தின் வளர்ச்சிக்கு பெருமளவில் உதவி செய்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

4. முல்லைப் பெரியாறு அணையில் மத்திய குழுவினர் நடத்திய ஆய்வின் அறிக்கை தேசிய அணைகள் பாதுகாப்பு குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

5. இலங்கைக்கு எதிரான நான்காவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 30 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சேவைத் துறையின் உலக மையமாக இந்தியாவை மாற்ற மாநிலங்கள் முன்வர வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

உற்பத்தியை ஊக்குவிக்கவும், தொழில்புரிவதை எளிமையாக்கவும் இது அவசியம் என்று புதுதில்லியில் நேற்று நிறைவடைந்த மாநில மற்றும் யூனியன்பிரதேச தலைமைச் செயலாளர்களின் தேசிய மாநாட்டில் பேசுகையில் அவர் கூறினார்.

விரைவில் தேசிய உற்பத்தி இயக்கத்தை மத்திய அரசு தொடங்க உள்ளதாகவும், ஒவ்வொரு மாநிலமும் இதற்கு முன்னுரிமை அளித்து சர்வதேச நிறுவனங்களை ஈர்க்கும் வகையில் உள்கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதம் பேர் உழைக்கும் வயதில் உள்ளதால் இது நமக்கு சாதகமாக உள்ளது என்றும், இதனுடன் பொருளாதார முன்னேற்றத்தையும் இணைக்கும்போது வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணம் மேலும் விரைவாக நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

நாடு தற்போது விரைவான சீர்திருத்தப் பாதையில் சென்றுகொண்டிருப்பதாகவும், இதன் ஒரு பகுதியாக இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கு அரசு முன்னுரிமை அளிப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இந்தியாவுக்கான உற்பத்தி இயக்கம் உலகளாவிய போட்டித்தன்மையின் அடையாளமாக மாறியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இறக்குமதிகளைக் குறைத்து உள்நாட்டிலேயே தயாரிக்கக்கூடிய 100 தயாரிப்புகளை மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து கண்டறிய வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தெற்கு ரயில்வேயில் சென்னை, கோவை, கொச்சி நகரங்களில் ரயில் பெட்டி முனையங்கள் விரிவுபடுத்தப்பட உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யவும், நெரிசலைக் குறைக்கவும் நாடு தழுவிய இணைப்பை மேம்படுத்தவும்

முக்கிய நகரங்களில் ரயில் பெட்டி முனையங்களை விரிவுபடுத்துவது அவசியம் என்று அவர் கூறியுள்ளார்.

2030ஆம் ஆண்டுக்குள் இந்த நகரங்களில் ரயில்வே இயக்கத் திறனை இரட்டிப்பாக்க தற்போதைய முனையங்களில் கூடுதல் நடைமேடைகள் உருவாக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நகர்ப்புறப் பகுதிகளில் புதிய முனையங்களைக் கண்டறிந்து உருவாக்குதல் மிகப்பெரிய அளவில் ரயில்பெட்டி பராமரிப்பு வளாகங்களை ஏற்படுத்துதல், ரயில்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிக்னல் மற்றும் பன்னோக்கு ரயில் பாதைகளின் திறனை அதகரித்தல் ஆகியவை விரிவாக்க நடவடிக்கையில் அடங்கும் என்று அவர் கூறினார்.

உடனடி, குறுகிய கால மற்றும் நீண்டகால நடவடிக்கையின் அடிப்படையில் இத்திட்டம் 3 கட்டங்களாக அமல்படுத்தப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

முல்லைப் பெரியாறு அணையில் மத்திய குழுவினர் நடத்திய ஆய்வு நிறைவு பெற்றுள்ளது.

அணையின் உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக உச்சநீதிமன்ற வழிகாட்டுதலில் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய ஆலோசனைப்படி மத்திய மண்ணியல் துறை விஞ்ஞானிகள் அடங்கிய குழுவினர் கடந்த 22ஆம் தேதி முதல் ஆய்வு மேற்கொண்டனர்.

நீருக்கு அடியில் உள்ள அணையின் கட்டமைப்புகள், பாதுகாப்பு அம்சங்கள், உறுதித்தன்மை சார்ந்த தொழில்நுட்பங்களை அந்தக் குழுவினர் ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வுகள் தொடர்பான அறிக்கை, முல்லைப்பெரியாறு அணையின் முதன்மைக் கண்காணிப்புக் குழு தலைவரான தேசிய அணைகள் பாதுகாப்பு தலைவர் திரு. அனில் ஜெயினுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய அரசு தமிழகத்தின் வளர்ச்சிக்கு பெருமளவில் உதவி செய்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சென்னை சோழிங்கநல்லூரில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், சென்னையில் மேற்கொள்ளப்பட்டு

வரும் மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு ஒரே தவணையில் 63 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கியதை சுட்டிக்காட்டினார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தின்போது 10 ஆண்டுகளில் 17 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் திறக்கப்பட்டதாகவும், ஆனால் திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி கூட புதிதாக திறக்கப்படவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

திமுக ஆட்சியில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், வெற்று அறிவிப்புகளாக உள்ளன என்றும், அவை செயல்வடிவம் பெறவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தோடர் பழங்குடியினர் தங்களது பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் தொன்றுதொட்டு பாதுகாத்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக உதகை அருகேயுள்ள முத்தநாடு மந்தில் நேற்று நடைபெற்ற திருவிழாவில் ஏராளமான தோடர் பழங்குடியினர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Saravanan - 47 Sec)**

<<<<>>>>

குமரிக் கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக் கடல் பகுதியில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஏனைய பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும், அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதலை தொடுத்து வரும் நிலையில் அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை சந்தித்துப் பேசியுள்ளார்.

--------------

பாகிஸ்தான் - ஆஃப்கனிஸ்தான் இடையே சுமுகமான உறவை ஏற்படுத்துவதற்கு சவுதி அரேபியா மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Ishaq Dar** கூறியுள்ளார்.

--------------

தலைநகர் தில்லியில் சுற்றுச்சூழல் மாசுபடுவதை கட்டுப்படுத்த கான்பூர் ஐ.ஐ.டி.-யுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் தரவுகள் சேகரிப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

--------------

வட இந்தியாவில் கடும் குளிர் நிலவுவதால் ஏழை எளிய மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்காக இரவு நேர காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

--------------

இந்திய கடற்படையில் உள்ள **INSV Kaundinya** பாய்மரக் கப்பல் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இன்று தொடங்குகிறது.

--------------

ராமநாதபுரம் மாவட்டத்தில் சித்திரங்குடி, காஞ்சிராங்குளம், சக்கரக்கோட்டை உள்ளிட்ட 5 சரணாலயங்களில் ஈர நிலப் பறவைகள் கணக்கெடுக்கும் பணி நேற்று தொடங்கியது.

--------------

கோபிசெட்டிபாளையம் மொடச்சூர் பகுதியில் அமைந்துள்ள தான்தோன்றி அம்மன் கோவில் திருவிழாவின் ஒரு பகுதியாக நேற்று வள்ளி கும்மி நடனம் நடைபெற்றது.

--------------

திருப்பத்தூர் மாவட்டம் நாற்றாம்பள்ளி அருகே பாலாற்றில் குளிக்கச் சென்ற இரு பெண்கள் நேற்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

--------------

மாமல்லபுரத்தில் தமிழக அரசின் சுற்றுலாத்துறை சார்பில் நடத்தப்பட்டு வரும் நாட்டிய திருவிழாவை விடுமுறை நாளான நேற்று ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கண்டுகளித்தனர்.

--------------

சென்னை மாநகராட்சியின் சார்பில் மெரினா கடற்கரையில் நேற்று நடைபெற்ற தமிழகத்தின் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

--------------

சென்னை பிராட்வே பிரகாசம் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 23 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள முதல்வர்

படைப்பகம் மற்றும் நவீன நூலகத்திற்கு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கைக்கு எதிரான நான்காவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 30 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 2 விக்கெட் இழப்பிற்கு 221 ரன் எடுத்தது.

Smriti Mandhana அதிரடியாக ஆடி 48 பந்துகளில் 80 ரன்னையும், Shafali Verma 46 பந்துகளில் 79 ரன்னையும் குவித்தனர்.

222 ரன் எடுத்தல் வென்றி என்ற இலக்கோடு பின்னர் விளையாடிய இலங்கை, 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 191 ரன் மட்டுமே எடுத்தது.

அருந்ததி ரெட்டி, வைஷ்ணவி ஷர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்ரீசரணி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

------------

விஜய் ஹஸாரே கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழ்நாடு இன்று கர்நாடகாவை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இன்று காலை **9** மணிக்கு இந்தப் போட்டி தொடங்குகிறது.

-------------

உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy,** அர்ஜுன் எரிகைசி ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

தோஹாவில் நடைபெற்ற இப்போட்டியில் **11** சுற்றுகள் கொண்ட மகளிர் பிரிவில் கடைசி **3** சுற்றுகள் நேற்று நடைபெற்றன.

இதில் **Koneru Humpy** சீன மற்றும் ரஷ்ய வீராங்கனைகள் மூவரும் **8** புள்ளி **5** புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர்.

இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக நடத்தப்பட்ட டை-பிரேக்கரில் சீன வீராங்கனை ஜூ-ஜினேர் பட்டம் வென்றார்.

**<<<<The End>>>>**